முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

**அ.வ.எண்.294/2015**

நாள். 29.07.2025 வா.சா.1 – திரு.சண்முக வேல்

த/பெ - திரு.மாசாணம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

1, 2, 6, 7, 10,11 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1). சர்வே எண்.850 ன் மொத்த விஸ்தீரணம் 7 ஏக்கர் 80 செண்ட் என்றால் சரி தான். 7 ஏக்கர் 80 செண்டில் 30 செண்டிற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரி தான். 30 செண்டு தனியாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி தான். அதன் சர்வே எண். 850/3A1D என்றால் சரி தான். நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 பட்டாவில் சர்வே எண். 850/3A1D க்கு 22.75 செண்டு உள்ளதாக உள்ளது என்றால் சரி தான்.

2) நீங்கள் தாக்கல் செய்துள்ள பட்டா அருஞ்சுனன் பெயரில் உள்ளது என்றால் சரி தான், ஆனால் அது தவறாகும். தாவா சர்வே எண்.850 ல் உங்கள் தாத்தா நாராயணக் கோனருக்கு 1/16 பாகம் உள்ளதாக கட்சி செய்கிறீர்கள் என்றால் சரி தான். மீதி பாகம் யாருக்கு பாத்தியம் என்றால் ஒளிமுத்து கோனார் என்ற பெயரில் 2 நபர்களும், எம்பெருமாள் கோனார் என்ற பெயரில் 2 நபர்களும், சுடலை முத்து கோனார், மாசாணக் கோனார் வேறு சில நபர்களுக்கும் உண்டு அவர்கள் பெயர்கள் எனக்கு ஞாபகம் இல்லை.

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2025.07.29 14:38:07 +0530

3) 7 ஏக்கர் 80 செண்டில் 1/16 பாகம் என்றால் 49 செண்டு தான் வரும் என்றால் சரி தான். உங்கள் தாத்தா மற்ற பங்காளிகளுடன் எப்போது பங்கு வைத்தார் என்றால் எனது தாத்தா இருக்கும் போது பங்கு வைத்தார்கள், ஆனால் எப்போது வைத்தார்கள் என்று எனக்கு தெரியாது. உங்கள் தாத்தாவிற்கு எவ்வளவு பங்கு என்றால் எனது தாத்தாவிற்கு 1 ஏக்கர் ஒதுக்கப்பட்டது. உங்கள் தாத்தா பெயருக்கு 1 ஏக்கர் ஒதுக்கப்பட்டதற்கு ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால் எனது தாத்தா பெயரில் பட்டா உள்ளது.

4) அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். அது எனது வழக்கறிஞரிடம் உள்ளது. உங்கள் தாத்தா எப்போது இறந்தார் என்றால் சுமார் 70 வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டார். உங்கள் தாத்தாவின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். ஆனால் என் கைவசம் உள்ளது. உங்கள் தாத்தாவிற்கு எத்தனை பேர் வாரிசுகள் என்றால் மாசாணக் கோனார், சிவனுக்கோனார் ஆகியோர்கள் ஆவார்கள்.

5) உங்கள் தாத்தா இறந்த பிறகு மாசாணக் கோனார், சிவனுக்கோனார் அனுபவம் செய்து வந்ததாக கூறும் வகைக்கு அதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். மாசாணக் கோனார், சிவனுக்கோனார் பெயரில் கூட்டு பட்டா எதுவும் கிடையாது என்றால் சரி தான். மாசாணக் கோனார்,

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.29 14:38:14 +0530

சிவனுக்கோனார் ஆகியோர்கள் பாகம் வைத்தார்களா என்றால் பாகம் வைத்தார்கள். எப்போது பாகம் வைத்தார்கள் என்றால் சுமார் 65 வருடத்திற்கு முன்பு பாகம் வைத்துக் கொண்டார்கள். அவ்வாறு பாகம் வைத்ததற்கு நீங்கள் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான்.

6) மாசாணக் கோனார், சிவனுக்கோனார் பாகம் வைத்ததில் ஆளுக்கு எவ்வளவு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் என் தகப்பனார் மாசாணக் கோனாருக்கு 50 செண்டும், எனது சித்தப்பா சிவனுக்கோனாருக்கு 50 செண்டும் ஒதுக்கப்பட்டது. உங்கள் தந்தைக்கு 50 செண்டும், உங்கள் சித்தப்பாவிற்கு 50 செண்டும் ஒதுக்கப்பட்டதாக கூறுகிறீர்கள் 1 ஏக்கரில் எந்த பகுதியில் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் ஊருக்கு மேற்கே உள்ள அம்மன் கோவிலுக்கு மேற்குப் பக்கம் 50 செண்டு ஒதுக்கப்பட்டது.

7) அவ்வாறு 50 செண்டு ஒதுக்கப்பட்டதற்கு நீங்கள் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். எனது அப்பாவிற்கு எந்த பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சர்வே எண். 852 ல் 20 செண்டும், சர்வே எண். 853 ல் 30 செண்டும் ஒதுக்கப்பட்டது. உங்கள் அப்பா எந்த வருடம் இறந்தார் என்றால் சுமார் 32 வருடம் இருக்கும். உங்கள் தந்தைக்கு யார் யார் வாரிசுகள் என்றால் நானும், நாராயணக்

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.29 14:38:21 +0530

கோனார், கல்யாணி, சுப்பம்மாள், செல்லம்மாள், இசக்கியம்மாள் ஆகியோர்கள் வாரிசு ஆவார்கள். அதில் நாராயணக் கோனார் காலம் சென்று விட்டார்.

8) நாராயணக் கோனாருக்கு எந்த சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சர்வே எண். 852 ல் 20 செண்டு ஒதுக்கப்பட்டது. அந்த சொத்தை அவர் விற்று விட்டார். உங்களுக்கு 30 செண்டு என்று கூறுகிறீர்கள் அது எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண். 853 ல் உள்ளது. சர்வே எண். 853 ல் உள்ள 30 செண்டிற்கு தான் உரிமை கோருகிறீர்கள் என்றால் சரி தான். தாவா சொத்துக்கு உங்கள் பெயரில் பட்டாவோ, தீர்வை ரசீதோ இல்லை என்றால் கூட்டு பட்டா உள்ளது.

9) வழக்கு சொத்தை நீங்கள் எந்த காலத்திலும் அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு சர்வே எண்.850 ல் 1 ஏக்கர் 30 செண்டு ஒளிமுத்து கோனார் குமாரர் சுடலை முத்து கோனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் இருக்கலாம், ஆனால் எனக்கு சரியாகத் தெரியாது. சுடலை முத்து கோனார் இறந்த பின்பு அவரது மகன் சுப்பையா கோனாருக்கு 1 ஏக்கர் 30 செண்டு ஒதுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10) சுப்பையா கோனார் இறந்த பிறகு அவரது மகன் 10 ம் பிரதிவாதி மாசாணத்திற்கு பாத்தியம் என்றால் கிடையாது. 10 ம் பிரதிவாதி மாசாணம் என்பவர் நம்பி என்பவருக்கு

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.29 14:38:28 +0530

40 செண்டை கிரையம் கொடுத்து விட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அது போக 44 செண்டை 10 ம் பிரதிவாதி அந்தோணி சேவியருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரி தான். 10 ம் பிரதிவாதியிடம் இருந்து ஆறுமுக கோனார் என்பவர் 23 செண்டு நிலத்தை கிரையம் வாங்கி உள்ளார் என்றால் சரி தான்.

11) 1 ம் பிரதிவாதி கோபால் தபசில் புல எண்ணில் 15 செண்ட் இடத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரி தான். 1 ம் பிரதிவாதி கோபால் கிரையம் வாங்கிய இடத்தை உட்பிரிவு செய்யப்பட்டு தனியாக அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரி தான். தபசில் புல எண்ணில் 2 ம் பிரதிவாதி வைரமுத்து 10 செண்ட் இடத்தை கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரி தான். கந்த கோனார் மகன் மாசாணமும் வழக்கு சொத்தில் இடம் வாங்கி உள்ளார் என்றால் சரி தான்.

12) முருகன் என்பவரும் 17 செண்டு நிலத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரி தான். ஆனால் அவர் அந்த இடத்தை விற்பனை செய்து விட்டார். நீங்களும், உங்கள் பேரனுக்கு 5 செண்டு நிலத்தை செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்து விட்டீர்கள் என்றால் சரி தான். உங்கள் சகோதரர் நாராயணக் கோனாரும் வழக்கு சொத்தில் 12 செண்ட் நிலத்தை பொறுத்து அவரது மகள் சுசிலாவிற்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரி தான்.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.29 14:38:36 +0530

13) நீங்கள் செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்ததை பற்றியும் உங்கள் சகோதரர் எழுதிக் கொடுத்துள்ள செட்டில்மெண்ட் பற்றியும் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரி தான். வழக்கு பிரதிவாதிகள் உங்களிடம் பிரச்சனை எதுவும் செய்யவில்லை என்றால் சரி தான். கோபால், வைரமுத்து, கிருஷ்ணன், முருகன் ஆகியோர்கள் மீது ஏன் வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் அவர்கள் பிரச்சனைக்கு வருவார்கள் என்று அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்தேன். வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

3 ம் பிரதிவாதி 1, 2, 6, 7, 10, 11 பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக கூறுகிறார்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.29 14:38:42 +0530